**Balu Saravana Sarma** Prohithar – Astrologer
No9, 4th street, Kalyan Nagar, Tambaram West, Chennai 45, INDIA.
Ph: +91 44 2226 1742, Cell: +91 98403 69677
Email: prohithar@gmail.com Web: www.prohithar.com

⌘ Please Visit http://www.prohithar.com/mistakes.html for Typing and information Mistakes in this document ⌘

# மார்கழி மாதம், விரோதி வருடம் சுப முகூர்த்த நாடகள் மற்றும் பண்டிகைகள்

# Auspicious Dates based on Drik-Vakya Panchangam, - Markazi month - Virothi Varusham (2009 – 2010)

## மார்கழி மாத சுப நாட்கள்

### மார்கழிமாத பிறப்பு மற்றும் முடிவு(தைமாத பிறப்பு)

| சித்தாந்தம் | | மாத பிறப்பு | மார்கழி மாத முடிவு(தை மாத பிறப்பு) |
|---|---|---|---|
| வரருசி வாக்கிய முறை | : | மார்கழி முதல் நாள்(16.12.2009) புதன் கிழமை காலை 6:52 மணி | 14.1.2010 தை மாத முதல் நாள் மாலை 3:33 மணி |
| ஆரியபட்டீயம் முறை | : | மார்கழி முதல் நாள்(16.12.2009) புதன் கிழமை காலை 6:54 மணி | 14.1.2010 தை மாத முதல் நாள் மாலை 3:27 மணி |
| திருக்கணிதம் முறை | : | கார்திகை 29 செவ்வாய் இரவு 1:52 (ஆங்கிலப்படி 16.12.2009 புதன் அதிகாலை 1:52) | 14.1.2010 தை மாத முதல் நாள் மதியம் 12:38 மணி |

"மாதங்களில் அவள் மார்கழி" _ கவி. கண்ணதாசன்

இறைஉணர்வினை மேலோங்க செய்யும் இம்மாதம், இறைவனை வழிபடும் மாதங்களில் மிகவும் முதன்மையானது இந்த மார்கழி(தனூர் மாஸம்)ஆகும், பக்திமணம் கமழும் இம்மாதம் திருக்கோவில் வழிபாட்டில் மிக முக்கிய அங்கம் வகிக்கிறது.

மார்கழி மாதத்தில் வரும் வைகுண்ட ஏகாதசி, ஹனுமத்ஜெயந்தி, நடராஜர் அபிஷேகம், ஆருத்திரா தரிசனம், கூடாரவல்லி, போகி பண்டிகைகள் சிறப்பு வாய்ந்தவை.

மார்கழி என்றால் நினைவுக்கு முதலில் வருவது வண்ணக்கோலம் தான் . ஒவ்வொரு இல்லத்தின் வாசலிலும் கோலங்கள் அழகுற போடப்பட்டு கோலப்போட்டி நடைபெறும்.


↑ படம்: 2008 ஆம் ஆண்டு கோலப்போட்டியில் பரிசு பெற்றவர்

சங்கீத மும்மூர்த்திகளில் ஒருவரான தியாகராஜர் அவர்களின் ஆராதனை திருநாளும் இம்மாதத்தில் தான் வருகைதந்து இசையால் இறைவனுக்கு வழிபாடு நடத்தப்படுகிறது, இந்நாளில் திருவையாற்றில் அனைத்து இசை கலைஞர்களின் இசையால் ஆராதனை விழா நடைபெறும்.

திருக்கோவில்களில் வைகறைப்பொழுதில் நாள் ஒன்றுக்கு ஒரு பாசுரம் என சைவ வழிபாட்டில் திருவெம்பாவையும், வைணவ வழிபாட்டில் ஆண்டாள் அருளிய திருப்பாவையும் ஓதி செந்தமிழால் இறைவனை துதிக்கும் சிறப்பான மார்கழி மாதங்களில் உயர்ந்ததாகும்.

திருவரங்கத்து சேர்ந்திசை திவ்யபிரபந்த முழக்கம் காதுகளில் தேனைவார்க்கும். மறவாமல் அரங்கத்து நாயகனை அதிகாலை வேளையில் தரிசிக்க இன்றே திட்டமிடுங்கள்.

இறைவனுக்காக அற்பணித்ததால் இம்மாதத்தில் இல்லங்களில் திருமணம், புதுமனை புகுவிழா, நிச்சியதாம்பூலம் போன்ற நிகழ்ச்சிகள் தவிர்க்கப்படுகிறது. இதற்கு முதல் காரணம் விவசாயத்தில் நெல் தலைசாய்து அறுவடை காலம் மற்றும் பெரும்பாலானவர்கள் விரதம் மேற்கொள்வதால் விருந்து உணவு வகைகளை ஏற்பதில்லை என்பதால் இல்ல நிகழ்வுகள் தவிர்க்கப்படுகின்றன.



மாத அடிப்படையில் நடைபெறும் தாலிக்கொடி மாற்றுதல் (திருமணப்பெண்)குழந்தைகளுக்கான திருமுடி இறக்கம், சீமந்தம், மஞ்சள் நீராட்டு விழா, பிறந்த நாளில் -ஆயுள் ஹோமம், இறைவழிபாட்டை முன்னிறுத்தி கணபதி ஹோமம், ருத்திர ஹோமம், நவக்கிரக ஹோமம் ஆகியன செய்யப்படுகிறது.

இக்கால கட்டத்தில் பூமத்தி ரேகையின் தென் பகுதியில் உள்ளவர்களுக்கு இப்பொழுது கோடைகாலம்(ஆனி மாதம் = ஜூன் , ஜூலை மாத சூழல்). சூரியன் நிராயன (நிர்+அயனம் = புவி சாய்வு கோணம் நீக்கிய சூரிய பயன பாகை) தட்சிணாயன காலத்தில் பயனிக்கும் முதல் மாதமான ஆடி மாதமும், கடைசி மாதமான மார்கழியும் முகூர்த்தங்களுக்கு விலக்கானதாகும்

மார்கழி பூக்கள்(டிசம்பர் பூ) பூத்துகுலுங்கும் மாதம் இது. தலையில் இரட்டை ஜடை பின்னல் போட்டு அதில் அழகுற தொடுத்த மார்கழிப்பூவை சூடி பள்ளிக்கு செல்லும் கிராமத்து மாணவிகளின் அழகே தமிழகத்தின் கலாசார அடையாளம்.

தெருக்களில் பஜனைப்பாடல்கள் பாடி அதிகாலையில் இறைவனை இசையால் வழிபட்டு, பூஜையின் இறுதியில் தரப்படும் அந்த வெண்பொங்கல் பிரசாதம் உண்பது மிகவும் ஆனந்தமான அநுபவம். இசைக்கலை, கோலம் இடல். விதவிதமான பிரசாதம் என மக்களின் கலைகளை போற்றும் மாதம் மார்கழி !

**மார்கழி மாத சுப நாட்கள்**

ஞாயிறு 20.12.2009
வளர்பிறை சதுர்த்தி, முழுநாளும் நன்று
தாலிக்கொடி மாற்றுதல், கணபதி ஹோமம், சீமந்தம், காது குத்தல், முடிஇறக்கம், மஞ்சள் நீராட்டுவிழா ஆகியன செய்ய உகந்த நாள்.

புதன் 23.12.2009
காலை 6-7:30 கணபதி ஹோமம், காதுகுத்தல், முடி இறக்கம் நன்று
ஞாயிறு 27.12.2009 மதியம் 12 மணிவரை
தாலிக்கொடி மாற்றுதல், கணபதி ஹோமம், சீமந்தம், காது குத்தல், முடிஇறக்கம், மஞ்சள் நீராட்டுவிழா

புதன் 30.12.2009
முழுவதும் நன்று.
தாலிக்கொடி மாற்றுதல், கணபதி ஹோமம், சீமந்தம், காது குத்தல், முடிஇறக்கம், மஞ்சள் நீராட்டுவிழா ஆகியன செய்ய உகந்த நாள்.

www.prohithar.com

ஞாயிறு 3.1.2010
சங்கடஹர சதுர்த்தி, முழுவதும் நன்று.
கணபதி ஹோமம், சீமந்தம், காது குத்தல், முடிஇறக்கம், மஞ்சள் நீராட்டுவிழா ஆகியன செய்ய உகந்த நாள்.

திங்கள் 4.1.2010 சதுர்த்தி
அதிகாலையில் கணபதி ஹோமம் மிகவும் சிறப்பானது

புதன் 6.1.2010
மாலை 5 மணிவரை மட்டும் நன்று. அனைத்து சுபம்களும் செய்யலாம்
தாலிக்கொடி மாற்றுதல், கணபதி ஹோமம், சீமந்தம், காது குத்தல், முடிஇறக்கம், மஞ்சள் நீராட்டுவிழா ஆகியன செய்ய உகந்த நாள்.

திங்கள் 11.1.2010
முழுநாளும் நன்று, அனைத்து சுபங்களும் செய்யலாம்
தாலிக்கொடி மாற்றுதல், கணபதி ஹோமம், சீமந்தம், காது குத்தல், முடிஇறக்கம், மஞ்சள் நீராட்டுவிழா ஆகியன செய்ய உகந்த நாள்.

**மார்கழி (விரோதி வருடம்) மிக நல்ல நாள் - நேரம்**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 05 | 20.12.2009 | ஞாயி | சுக்கில சதுர்த்தி | திருஓ | அ | தனுஸ் | 07.00-08.00 |
| 12 | 27.12.2009 | ஞாயி | சுக்கில தசமி | அச்வினி | சி | தனுஸ் | 06.30-07.30 |
| 15 | 30.12.2009 | புதன் | சுக்கில சதுர்தசி | ரோஹிணி | சி | மகரம் | 08.00-09.30 |
| 22 | 06.01.2009 | புதன் | கிருஷ்ண ஷஷ்டி | உத்திரம் | அ | மீனம் | 11.00-12.00 |
| 27 | 11.01.2010 | திங் | கிருஷ்ண ஏகாதசி | அனுஷம் | சி | மகரம் | 06.00-07.30 |

பாலு. சரவண சர்மா

கரிநாள்: 21, 24, 26 டிசம்பர் 2009
சஷ்டி: 22.12.2009 செவ்வாய் அன்று வருவது மிகவும் சிறப்பானது
சதுர்த்தி: 20.12.2009, 3.1.2010 (மாலை), 4.1.2010 (காலை)
பிரதோஷம்: 29.12.2009, 12.1.2010
கிருத்திகை: 28.12.2009 திங்கள் மாலை மற்றும் 29.12.2009 செவ்வாய் காலை மிகவும் சிறப்பானது
ஏகாதசி: 28.12.2009 திங்கள் வைகுண்ட ஏகாதசி, 11.1.2010 திங்கள் சர்வ ஏகாதசி திதி

**சந்திர கிரஹணம்: (31.12.2009 இரவு - 01.01.2010 அதிகாலை) Partial Eclipse of the Moon, 31.12.2009 - 01.01.2010**

அறிவியல் பார்வை:

மார்கழி மாதம் 16 வியாழன் (31.12.2009) இரவு 10:45 மணி அளவில் துவங்கி அதிகாலை 3 மணி (1.1.2010) வரை ***பகுதி சந்திரகிரஹணம்*** (Partial Eclipse) நிகழ்கிறது. இது இந்தியாவில் தெரியும். "*பகுதி சந்திரகிரஹணம்*" என்றால் பூமியின் உண்மையான நிழல்(Umbra) மற்றும் அடுத்த மறைநிழல் (Penumbra) பகுதியில் சந்திரனின் விட்டத்தில் குறிப்பிட்ட பகுதியில் மட்டும் நிகழும் கிரஹணம் ஆகும்.

சந்திரனின் விட்டத்தை (2,159 mi = 3,474 kilometers)விட பூமியின் விட்டம் (7,926.41 miles = 12,756.32 kilometers). சுமார் 3.6 மடங்கு பெரியது எனவே பூமியின் நிழல் பகுதியை சந்திரன் கடக்க அதிக நேரம் எடுக்கும். முழு சந்திர கிரஹனம் மிகநீண்டு இருக்கும். இது பகுதி சந்திரகிரஹணம் என் பதால் மிக குறைந்தளவு நேரமே நிகழ்கிறது. 31.12.2009 அன்று நிகழும் சந்திரகிரஹணம் அதிகபட்டசமாக மறைநிழல் பகுதியில் துவங்கி முடியும் நேரம் 4மணி 11நிமிடங்கள், இதில் **உண்மையான கிரஹண நேரம் இரவு 12:22 முதல் 01:24 வரை 62 நிமிடங்கள் மட்டுமே ஆகும்.**

ஜோதிட பார்வையில் : கிரஹணம் திருவாதிரை நட்சத்திரத்தில் நிகழ்கிறது, எனவே திருவாதிரை, முன் பின் நட்சத்திரங்களான மிருகசீருஷம், புனர்பூசம், திரிகோணத்தில் அமைந்துள்ள (பத்தாம் நட்சத்திரங்கள்) சுவாதி, சதையம் நட்சத்திரத்தினர் நவக்கிரக சாந்தி அர்ச்சனை மற்றும் அருகில் உள்ள ஆதரவற்றோர் இல்லங்களில் அன் னதானம் செய்யவும்

**Astrological View:** Thiruvadirai, Swathi, Punarpoosam, Mirugasirusham stars are affected by eclipse. perform Navagrha Archana and perform ***Annadanam*** (offering food ) to nearest Orphanage




Eclipse will be visible in the region covering Alaska, Australia, Indonesia, Asia, Africa, Europe including the British Isles and the Arctic regions.

The beginning of the umbral phase will be visible from the extreme south-eastern part of Australia, middle of South and North Pacific Ocean and extreme Solomon Is. The ending of the umbral phase will be visible from North and South Atlantic Ocean and Greenland.

The beginning, the middle and the ending of the eclipse will be visible from all parts of India.




அறிவியல் பார்வையில் சந்திரகிரஹணம் ஆய்வு செய்யும் அளவு முக்கியத்துவம் வாய்ந்ததல்ல, எனவே இதை அறிவியலாளர்கள் பெரியதாக எடுத்துக்கொள்வதில்லை.

தங்கள் பகுதியில் நிகழும் கிரஹண நேரம் கணக்கிட எனது இணையதளத்தினை பார்வை இடவும்

Please Visit my website for calculate Eclipse time for your place

http://www.prohithar.com/eclipse_calculator.html

| கிரஹண காரணிகள் **ELEMENTS OF THE ECLIPSE** | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| Universal Time of Opposition in Right Ascension : December 31d 19 h 04m 46s.055 | | | | | | |
| | MOON | | | SUN | | |
| | h | m | s | h | m | s |
| Right Ascension | 6 | 44 | 33.88 | 18 | 44 | 33.88 |
| Hourly Motion | | | 162.60 | | | 11.04 |
| | ° | ' | " | ° | ' | " |
| Declination | 24 | 03 | 02.79 | -23 | 02 | 36.59 |
| Hourly Motion | - | 06 | 21.33 | | + | 11.76 |
| Equatorial Horizontal Parallax | | 60 | 57.40 | | | 08.94 |
| True Semi-diameter | | 16 | 36.59 | | 16 | 17.50 |

**“கோவில்களில் கிரஹணத்தை முன் னிட்டு நடராஜர் அபிஷேகம், திருவாதிரை வழிபாடு நேரத்தில் மாற்றம் இருக்கும்”**

**Natrajar Abishegam & Thiruvathirai Pooja time may be change due to lunar eclipse**

| கிரஹண காலவியல் புள்ளிவிபரம் **CIRCUMSTANCES OF THE ECLIPSE** | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | Universal Time | | | **Indian Standard Time** | | | Position Angle measured from the North Point of Moon's Limb (N.E.S.W.) | The Moon being in the Zenith in | | | |
| | | | | | | | | Latitude | | Longitude | |
| | date | h | m | date | h | m | ° | ° | ' | ° | ' |
| Moon enters penumbra | 31.12.2009 | 17 | 15.3 | 31.12.2009 | 22 | 45.3 | 139 | +24 | 14 | +100 | 49 |
| **Moon enters umbra** | 31.12.2009 | 18 | 51.7 | 01.01.2010 | **00** | **21.7** | 173 | +24 | 04 | +77 | 44 |
| **Middle of the eclipse*** | 31.12.2009 | 19 | 22.7 | 01.01.2010 | **00** | **52.7** | - | +24 | 01 | +85 | 20 |
| **Moon leaves umbra** | 31.12.2009 | 19 | 53.6 | 01.01.2010 | **01** | **23.6** | 207 | +23 | 58 | +62 | 55 |
| Moon leaves penumbra | 31.12.2009 | 21 | 30.0 | 01.01.2010 | 03 | 00.0 | 242 | +23 | 47 | +39 | 50 |

* Magnitude of the eclipse =0.081 (Moon's diam =1.0). Distance between the centers at middle 3571".4
Radius of shadow cone at Moon's distance : Penumbra 4730".7, Umbra 2736".7

The eclipse is visible in the region west of the eastern limit and east of the western limit.
Here, Moonset and Moonrise times relate to visibility of the center of the Moon on the horizon.

www.prohithar.com

அறிவியல் பார்வையில் சந்திரகிரஹணம் ஆய்வு செய்யும் அளவு முக்கியத்துவம் வாய்ந்ததல்ல, எனவே இதை அறிவியலாளர்கள் பெரியதாக எடுத்துக்கொள்வதில்லை.

தங்கள் பகுதியில் நிகழும் கிரஹண நேரம் கணக்கிட எனது இணையதளத்தினை பார்வை இடவும்

Please Visit my website for calculate Eclipse time for your place

http://www.prohithar.com/eclipse_calculator.html

வேண்டுகோள்:

திருப்பாவை, திருவெம்பாவை நூல்களை கோவிலுக்கு வருபவர்களுக்கும், கிராமத்தில் - அரிஜன குடியிருப்புகளில் வசிக்கும் மக்களுக்கு தானம் செய்தல் மகா புண்ணியம்.

அரிஜன குடியிருப்புகளில் உள்ள கோவில்களுக்கு மார்கழிமாத வழிபாட்டின் ஒரு குறிப்பிட்ட தொகையை உதவிசெய்து இந்து மதநெறிகளை வளர்க்கவும், மதமாற்றத்தினை தடுக்கவும் முன் வாருங்கள். இதுவே எனது தாழ்மையான வேண்டுகோள்.








இறைத்தொண்டில்

**பாலு சரவண சர்மா**

*பரம்பரை புரோகிதர்- ஜோதிடர்*

எண் 9, 4வது தெரு, கல்யாண் நகர், தாம்பரம்(மே), சென்னை 45, பாரத நாடு.

தொலைபேசி: 91 44 2226 1742, 91 98403 69677

**மின் னஞ்சல்: prohithar@gmail.com** **இணையம்: www.prohithar.com**

© கருத்து காப்புரிமை

**|| Contact time IST 13:30 to 20:30 ||**

13.12. 2009